1990 மார்ச் 22]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே,

(அ) தற்போது மேல்நிலைப் பள்ளிகளில் அரசு செலவில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

தனியார் கல்லூரிகள், பள்ளிகளில் நன்கொடை வசூல்.

*2623 **திரு. அ. இரகுமான்கான் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தனியார் கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றில் நன்கொடை என்ற பேரில் பெரும்பணம் வசூலிப்பதால், ஏழை எளிய மாணவர்கள் படிக்க முடியாத சூழ்நிலை குறித்து அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தனியார் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும்போது நன்கொடை எதுவும் வசூல் செய்யக்கூடாது என அவ்வப்போது பள்ளி, கல்லூரிக் கல்வி இயக்குநர்களால் சம்பந்தப்பட்ட பள்ளி கல்லூரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பண உதவியைப் பெற்று நடைபெறும் தனியார் கல்லூரி, பள்ளிகளுக்கும் இது பொருந்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, அரசு நிதி உதவி பெறுகிற, ஆசிரியர்களுடைய சம்பளத்திற்காகப் பெறுகிற நிதி தவிர, நிர்வாகச் செலவுக்காக ஒரு பகுதி பெறுகிற எந்தக் கல்வி நிலையமாக இருந்தாலும், நன்கொடை வசூலிப்பது என்றால் சில முறைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. உரிய திட்டத்திற்கு அல்லது பணிக்கு, பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினுடைய ஆலோசனையோடு, அவர்களுடைய இசை

வோடு முறைப்படி வசூலித்து இரசீதுகள் வழங்க வேண்டும் என்ற விதிகள் இருக்கின்றன. அவற்றை மீறி நடைபெறுமானால், அப்பொழுது அது நடவடிக்கைக்கு உரியதாகும்.

திரு. கே. ரமணி: தலைவரவர்களே, இது ஒரு மிக முக்கிய மான கேள்வி. பாரதியார் யூனிவர்சிட்டியோடு இணைக்கப் பட்டிருக்கும்படியான கொங்குநாடு கல்லூரியில் அவர்கள் வாங்கக் கூடிய அந்த கேப்பிடேஷன் ஃபீயை எதிர்த்து, பெரும் மாணவர் போராட்டம் நடந்து, கடைசியிலே 40 மாணவர்களுக்கு மேலே அந்த யூனிவர்சிட்டியினுடைய சம்மதமே இல்லாமல், அவர்களை உள்ளேயே விட்டு, அவர்களுக்குக் கொஸ்டியன் பேப்பரும் வழங் காமல், நம்பரும் டிக் பண்ணாமல் ஒரு ஹாலுக்குள்ளே விட்டே அவராகவே எக்சாமினேஷன் நடத்தினார். அவர் பெயரிலே கிரிமினல் கேஸ் போட வேண்டும் என்று சொல்லி செனட்டிலே பேசி அதிலே முடிவு வந்திருக்கிறது. அப்படிப்பட்ட கல்லூரிக்கு அதுவும் அங்கே துணை வேந்தர் அவர்கள் ரொம்ப பரிதாபமாகச் சொன்னார் செனட்டிலே. நானும் தோழர் மோகனும் இங்கே யிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கே செனட்டிலே மெம்பர் களாக இருக்கிறோம். அவர்கள் சொன்னார்கள், எங்களுக்கு வேறு எந்த அதிகாரமும் இந்த கேப்பிட்டேஷன் ஃபீயைத் தடுப் பதற்கு இல்லை என்று. அது இல்லை என்றால், நாங்கள் நட வடிக்கை எடுக்கத் தயார். ஆகவே யூனிவர்சிட்டி ஆக்டிற்கு ஒரு அமென்ட்மென்ட் கொண்டு வந்து, இணைக்கப்பட்ட கல்லூரி களிலே இப்படி வரக்கூடிய தவறான முறைகளை, பொது மக்களையும் ஏமாற்றக் கூடிய நடவடிக்கைகளுக்கு ஒரு முடிவு கட்ட அங்கேயும் அதிகாரம் கொடுத்து, உரிய நடவடிக்கையை, இதிலே கிரிமினல் கேஸ் உட்பட அப்படிப்பட்ட நிர்வாகத்தின் பேரிலே எடுப்பதற்குத் தகுந்த ஆலோசனைகளை நமது அமைச் சரவர்கள் அவர்களுக்கு வழங்கி நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு தலைவ ரவர்களே, இத்தகைய முறைகேடாக நடந்து கொள்ளக்கூடிய கல்லூரிகளைக் கட்டுப்படுத்தக் கூடிய பல அதிகாரங்கள் பல் கலைக் கழகத்திற்கு இருக்கின்றன. ஒன்று, அவர்கள் அனுப்புகிற அந்த மாணவர்களைத் தேர்வுக்குப் பல்கலைக் கழகம் என்றைக் கும் அனுமதிக்காது. எனவே, அந்த மாணவர்கள் அங்கே தொடர்ந்து படிப்பது என்பது பயனற்றது என்ற முடிவுக்குத் தாமே வருவார்கள். மற்றொன்று, பல்கலைக் கழக மானியக் குழு தருகிற உதவியை நிறுத்த வேண்டுமென்று. அப்படி வழங்கப் படுகிற நிலைமை இருக்குமேயானால், நிறுத்துவதற்கும் பல் கலைக் கழகம் ஆலோசனை சொல்லலாம். அதைத் தவிர, அர சாங்கம் வழங்குகிற மானியம் ஏதாவது இருக்குமானால், அதை யும் குறைக்க நடவடிக்கை எடுக்கலாம். இவையெல்லாம் இல் லாமல், அவை தனிப்பட்ட முறையிலே நடக்கிற ஒரு கல்லூரி

யாக இருக்குமானால், ''அஃபிலியேஷன்''—இணைப்பை ரத்து செய்யலாம். எனவே, இந்த அதிகாரங்களைப் பயன்படுத்த, பல்கலைக் கழகத் துணை வேந்தர் தேவையானால் அரசாங்கத்தினுடைய ஆலோசனையையும் பெறலாம்.

9–15 மணி

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்ம சிந்தனை, வள்ளல் தன்மை உள்ள பெரியோர்கள் அறப்பணியாகக் கருதித்தான் தனியார் பள்ளி, கல்லூரிகளைத் தொடங்கி மக்கள் பணி என்ற முறையில் நடத்தி வந்தார்கள். இந்த நிறுவனங்கள் இன்றைக்கு இலாப நோக்கோடு ஒரு தொழிற்சாலையைப் போல, எஜுகேஷன் என்பது ஒரு இண்டஸ்டரி என்கிற அளவிற்கு மனநிலைமை வளர்ந்திருப்பது தடுக்கப்பட வேண்டும். இதுபோன்ற நோக்கோடு செயல்படுகிற தனியாருடைய கல்லூரிகள், பள்ளிக் கூடங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு சட்ட ரீதியாக நடவடிக்கையெடுக்க ஏதேனும் வழிமுறைகளை அரசு கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, பல்கலைக் கழகம், தலைவரி என்பதைப் போல, கேபிடேஷன் ஃபீஸ் வசூலிக்கிற எந்த ஒரு கல்லூரியையும் தொடர்ந்து பல்கலைக் கழக அனுமதி பெற்றதாக இல்லாமல் நீக்கிவிட முடியும். அதற்கான நடவடிக்கையெடுப்பதில் ஏதேனும் இடையூறு இருக்குமானால், அவர்கள் அரசாங்கத்திற்குத் தெரிவித்தால் தகுந்த ஆலோசனை வழங்கப்படும். தேவையானால் சட்டத் திருத்தம் செய்யலாம்.

THIRU OSCAR C. NIGLI : Hon. Speaker, Sir, the problem of collecting donations is faced in Tamil Nadu. There are S.S.L.C. Schools, Anglo-Indian Schools, Matriculation Schools and C.B.S.E. Schools. Out of these, the S.S.L.C. and Anglo-Indian Schools are under the control of the Government. But the Matriculation Schools and C.B.S.E. Schools are not under the control of the Government. Therefore they resort to worst form of collecting donations and collect maximum donations from the public. Unless, there is some kind of control by Government over these schools, this cannot be avoided. Therefore, will the Government come forward to bring some control over these Matriculation and C.B.S.E. Schools in Tamil Nadu.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலிருந்து நேரடியாக அந்தக் கேள்வி எழாது. இருந்தாலும்கூட, மெட்ரிகுலேஷன் பள்ளிகளை அனு

மதிக்கிற, அங்கீகாரம் செய்கிற உரிமை தமிழக அரசுக்கு இருக்கிறது. ஆனால் சென்ட்ரல் போர்ட் ஆப் செகண்டரி எஜுகேஷன் என்ற அமைப்பில் அனுமதி பெற்று நடத்தப்படுகிற, மத்திய கல்விக் குழுவினுடைய இசைவு பெற்று நடத்தப்படுகிற அந்தப் பள்ளிகளை முழு அளவிற்குக் கட்டுப்படுத்த நமக்கு அதிகாரம் இல்லை. இது தொடர்ந்து பரிசீலிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது.

திருமதி பாப்பா உமாநாத் : தலைவர் அவர்களே, தனியார் கல்லூரி, பள்ளிகளுடைய அட்டகாசங்கள் அதிகரித்து இருக்கிற இந்த நேரத்தில் அமைச்சர் அவர்கள் அழகாக பதில் சொல்கிறார்கள். ஆனால் நடைமுறையில் அது அமலாக்கப்படுவது இல்லை. எங்கள் மாவட்டத்தில் புத்தனாம்பட்டி கல்லூரி தனியார் கையில் மாட்டி ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு மாதமும் ஊதியம் கூட தர முடியாத அளவிற்கு நிலைமை போய்க் கொண்டிருக்கிறது. ஆகவே, ஒரு கறாரான நிலையை எடுப்பது உதவிகரமாக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அரசு நேரிடையாகத் தொடர்புடைய கடமைகளில் மிகப் பெரிய அளவிற்குக் கறாராக இருக்கிற அந்த ஒரு முறையை மேற்கொள்ள முடியும். தனியார் அமைப்புகள் இடம் பெறுகிற பல்வேறு துறைகளில் அவ்வப்போது சீர்திருத்தம் செய்கிற முயற்சியும் நடைபெறுகிறது. அவர்கள் அப்படித் தவறி செயற்படுவார்களானால் அல்லது முறைகளை ஏற்றுக் கொள்ள மறுப்பார்களானால் அந்த நிர்வாகப் பொறுப்பை தற்காலிகமாக அரசு எடுத்துக் கொண்டு அரசு அலுவலர்கள் ஆகிய கல்வித் துறை அதிகாரிகளின் மேற்பார்வையில் நடத்துகிற ஒரு முறையும் இருக்கிறது. தேவைப்படுகிறபோது அது பயன்படுத்தப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இதுமாதிரியான தனியார் கல்லூரிகள், பாலி டெக்னிக்குகள் போன்றவை அரசு என்ன நடவடிக்கை எடுத்தாலும்கூட நன்கொடை என்கிற பெயரால் பணம் வாங்காமல் படிக்க அனுமதி கொடுப்பதில்லை. இதைத் தடை செய்ய அரசாங்கம் தீவிர நடவடிக்கையெடுத்து அப்படிப்பட்டவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை தொடர முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இது மதுவிலக்குப் போல ஒரு சமுதாயப் பிரச்சினை. நன்கொடை கொண்டு போய் கொடுப்பவர்கள் கொடுப்பது மட்டுமல்ல, தாங்கள் கொடுத்த விவரத்தைக் கூட அரசாங்கத்திற்குத் தெரிவிக்கத் தயங்குகிறார்கள். நன்கொடை கொடுக்காதவர்கள் எங்களை நன்கொடை கேட்டார்கள், நாங்கள் கொடுக்கவில்லை,

1990 மார்ச் 22]

அதனால் அனுமதி கிடைக்கவில்லை என்று எழுதுகிறார்கள். எனவே, நன்கொடை கொடுத்தவர்கள் சாட்சி சொன்னால் தவிர, வழக்கு என்ற முறையில் பதிவு செய்து நடவடிக்கையெடுக்க முடியாது என்பது ஒன்று. மற்றொன்று, இப்படிப்பட்ட கல்லூரி களில், முறையைப் பின்பற்றாது நன்கொடை வாங்குகிறார்கள் என்பது அரசுக்கு எந்த வகையிலும் சான்றுகளுடன் தெரிய வரு மானால், நேரிடையாக நடவடிக்கையெடுக்க வாய்ப்பு இருக் கிறது. ஆனால் நேரிடையாகப் புகார் தெரிவிக்க முற்படும் நிலை இல்லாத காரணத்தால், இந்தக் குறை பொதுக் குறை யாக இருக்கிறது. இன்னொரு வகையில் சொல்லப் போனால், பல அமைப்புகள் இடைக் காலத்தில்—இடைக்காலம் என்று நான் சொன்னால் போதும் என்று கருதுகிறேன்— இந்த அடிப்படையில் உருவாக்கப்பட்டு விட்டன. எனவே, இப்போதுதான் அதைக் களைவதற்கான வழிமுறைகள் தேடப்படுகின்றன.

9-20 மணி

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதில் சொல் லும்போது, இந்த மாதிரி முறைகேடாக நடக்கிற பள்ளிகளில் படித்த மாணவர்களைப் பரிட்சை எழுதவிடாமல் பல்கலைக் கழகங்கள் மூலமாக கடைசியில் நிறுத்திவைப்பதற்கான வாய்ப்பு கள் இருப்பதாகச் சொன்னார்கள். படித்து முடித்த பிறகு, பரிட்சை எழுதும்போது, நிறுத்துவதன் மூலமாக மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்கள் அதிகமாகும். அதோடு இந்தக் கல்வி என்பது சமுதாயப் பிரச்சினை என்று சொன்னார்கள். வாஸ்த வத்திலேயே அது மிக மிக உண்மை. கல்வி என்பது எல்லாவற் றையும்விட முக்கியமாக இருக்கின்ற ஓர் அம்சமாகும். அது இன்றைக்கு வியாபார நோக்கத்தோடு நடத்தப்படுகிறது என்று பல்வேறு உறுப்பினர்கள் அதுபற்றி கேட்டார்கள். அதைத் தடுப் பதற்கு இப்போது உள்ள சட்ட விதிமுறைகளிலே இடம் இல்லை என்று சொன்னாலும்கூட—சரியான விதிமுறைகளின் மூலமாக இப்படி வியாபார நோக்கத்தோடு முறைகேடாக நடத்துவது, மாணவர்களைச் சேர்ப்பது, கடைசியாக பரிட்சையை எழுதவிடா மல் தடுக்கும்போது கோர்ட்டுக்குப் போவது, பரிட்சை எழுத அனுமதி வாங்குவது என்று இப்படி எல்லாம் நடந்து கொண்டு வருகிறதே, இதைத் தடுப்பதற்கு விசேஷ முயற்சி எடுத்து, இப் போது உள்ள சட்டத்திலே இடம் இல்லை என்று சொன்னாலும் கூட—புதிதாக சில விதிகளையும், சட்டங்களையும் இயற்றி, முறையாக இந்தக் கல்வியைக் கொண்டு வருவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்த அடிப்படையிலே, தமிழகத்திலே உயர்நீதி மன்றத்திலும், உச்சநீதி மன்றத்திலும் சில வழக்குகளே கூட நடைபெற்றுக்

கொண்டு இருக்கின்றன. ஒன்று, கல்வியை ஒரு தொழிலாகக் கருதுகின்ற ஒரு மனப்பான்மை அல்லது எண்ண ஓட்டம் கடந்த 10, 15 ஆண்டுகளில் மிக வேகமாக உருவாகி, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும், இதுபோன்று பொறியியல் தொடர்பான பாலி டெக்னிக் போன்ற அமைப்புகளிலும் இடம் பெற்றுள்ளது. ஒரு குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிலேயிருந்து நிதி பெறலாம், பெறுகிற நிதியைக் கொண்டு கல்லூரியை வளர்ப்பதாகவும் காட்டலாம், மிச்சமும் படுத்தலாம் என்ற நோக்கத்தோடு பல அமைப்புகள் தாங்களாகவே உருவாகிவிட்டன. அவை எல்லாம் அரசாங்கத்தினுடைய அனுமதி இல்லாமல் நடத்த முடியாது என்ற ஒரு கட்டாயமான நிலைமையைச் செயல்படுத்த முடியாத ஒரு சூழ்நிலையும் நீடிக்கிறது. என்ன காரணம் என்றால், சில அமைப்புகள் சிறுபான்மையோர் என்ற உரிமையை வைத்துக் கொண்டு, நீதிமன்றத்திலே வாதாடுகிறார்கள். இந்தச் சிறு பான்மை என்ற வாதம் பெரும்பான்மைக்குப் பெரிய தொல்லை யாக இருக்கிறது என்பதையும், சிறுபான்மை என்ற பெயரால் சில முறைகேடுகள் நடைபெறுவதற்கு அரசியல் சட்டத்திலே இருக்கிற சில உரிமைகளை அவர்கள் பயன்படுத்திக்கொள் கிறார்கள் என்பதையும், இந்த அவைக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். சிறுபான்மையோராக இருந் தாலும், யாராக இருந்தாலும் ஒரு கல்வி நிலையத்தை ஏற்படுத்து கிறபோது, அரசினுடைய விதிமுறைகளோடு ஒத்து, இசைந்து முறைப்படி நடத்தவேண்டும் என்று ஒரு கட்டாயமான நிலைமை இருந்தால் தவிர, கட்டுப்படுத்துவது சற்றுக் கடினமாகும்.

செய்யாறு தாலுகாவை செங்கை அண்ணா மாவட்டத்தோடு இணைத்தல்

*3565 திரு. வ. அன்பழகன் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) செய்யாறு தாலுகாவை செங்கை அண்ணா மாவட்டத் தோடு இணைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது இணைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.